



PORIYIYAL KADHIR

தனி பிரதி
ரூ.10/-




# பொறியியல் கதிர்


| கதிர் 48 | பாரிப்பு 12 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஆகஸ்ட் 2016 |
|---|---|---|---|


நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை

சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**

CHEPAUK, CHENNAI - 600 005.

Website : www. tnengga. org    email id : tneapwd@yahoo.co.in

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் பி.ஆசைத்தம்பி உ.செ.பொ அவர்கள் பணி ஒய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்




2016-2017 ஆம் ஆண்டிற்கான சேலம் கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 12 (2015 - 2016)

# தொடரும்

# நம் பயணம் .......



**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!**

2014-1 5, 2015-16 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் காலி பணியிட மதிப்பீடு (Estimate of vancancy) கருத்துரு அரசுக்கு அனுப்ப முன்னாள் தலைமைப் பொறியாளர்(பொது) அவர்களை தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். ஆனால் அனுப்பாமலேயே சென்று விட்டார். தற்போது கூடுதல் பொறுப்பு வகிக்கும் தலைமை பொறியாளர் (பொது) அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பகுதி நேர பட்டப்படிப்பு படித்த இளநிலை பொறியாளர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதவி பெயர் மாற்றம் (Redesignation) செய்து உலகசாதனை புரிந்திருக்கிறார் திருவாளர் திருமாறன் அவர்கள். உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக, நடைமுறை விதிகளுக்கு புறம்பாக, மிக அக்கிரமாக இந்த ஆணையை பிறப்பித்திருக்கிறார். அரசிடம் ஒரு தெளிவுரை பெற்ற பிறகு அந்த ஆணையை மாற்றித்தருவதாக கூறி அரசுக்கு கருத்துரு அனுப்பாமல் காலம் கடத்தி விட்டு சென்று விட்டார். கூடுதல் பொறுப்பு தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் கருத்துரு அனுப்புவதாக கூறியிருக்கிறார்.

பொதுவாக வருகின்ற எல்லா தலைமைப் பொறியாளர்களும் திட்டமிட்டு பட்டயப் பொறியாளர்களை ஒழித்து கட்டுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். நாமும் இவர்களை பழிவாங்க வேண்டும் என நினைத்தால் இவர்கள் கதி அதோகதி என்பதை இவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

தற்போது பொதுப்பணித்துறையில் 7 தலைமைப் பொறியாளர் பதவிகள் காலியாக உள்ளது. இருந்தாலும் பொதுப்பணித்துறை நன்றாகவே செயல்படுகிறது. இது சில தலைமைப்பொறியாளர் பதவிகள் தேவையில்லை என்பதையே காட்டுகிறது. வேண்டுமென்றே சில தலைமைப் பொறியாளர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. நிறைய பேர் தலைமைப் பொறியாளர் பதவி பெறவேண்டும் என்பதற்காகவே நிறைய தலைமைப் பொறியாளர் பதவிகள் உருவாக்கி இருப்பார்களோ என தோன்றுகிறது. சில தலைமை பொறியாளர் பதவிகள் உருவாக்கிய அரசாணைகளுக்கு இன்னும் விதித்திருத்தம் (Rule Amendment) வழங்கப்படவில்லை.

தேவையற்ற தலைமை பொறியாளர் பதவிகளை ஒழிக்க ஏன் அரசை வலியுறுத்தக் கூடாது என்பது குறித்து அடுத்த பொதுக்குழுவில் விவாதித்து முடிவெடுக்கப்படும்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

Er.D. MURUGESAN, General Secretary
Cell Nos. 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

ABSTRACT

Rules – Tamil Nadu Engineering Service – Public Works Department – Re-designation of the posts of Draughtsman Grade I and Chief Head Draughtsman – Amendments to Special Rules – Orders – Issued.

Public Works(A2) Department

G.O(Ms) No. 153 Dated: 15.06.2012

ஆனி1,

திருவள்ளுவர் ஆண்டு 2043

Read again:

G.O(Ms) No. 1427, Public Works Department, dated 24.08.1981

Read also:

1. From the Engineer-in-Chief, Water Resources Organisation and Chief Engineer (General), Public Works Department Letter No. S1(3)88977/97,dated 18.11.1999.
2. From the Secretary, Tamil Nadu Public Service Commission Letter No. 6833/ RND-A2/2008, dated 25.05.2012

ORDER:

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

NOTIFICATION

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Service (Section 10 in Volume II of the Tamil Nadu Services Manual, 1969).

2 (1) The amendment (1) hereby made shall be deemed to have come into force on the 10th July 1960.

(2) The amendments (2) and (3) hereby made shall be deemed to have come into force on the 24th August 1981.

AMENDMENTS

In the said Special Rules, in Part II, under the heading "Branch I – Public Works":-

(1) for the expression "Head Draftsman" or "Head Draughtsman" wherever it occurs the expression "Special Grade Draughtsman" shall be substituted;

(2) for the expression "Chief Head Draughtsman" or "Chief Head Draftsman" wherever it occurs the expression "Chief Technical Officer" shall be substituted;

(3) for the expression "Draftsman Grade – I" or "Draughtsman Grade – I" wherever it occurs the expression "Senior Technical Officer" shall be substituted;

(By Order of the Governor)

M. Sai Kumar,
Secretary to Government.

**ABSTRACT**

Rules – Tamil Nadu Engineering Service – Public Works Department – Re-designation of the posts of Special Grade Draughtsman, Senior Technical Officer, Chief Technical Officer and Special Grade Technical Officer - Amendments to Special Rules – Orders – Issued.

Public Works(A2) Department

G.O(Ms) No. 154 Dated: 15.06.2012
ஆனி1,
திருவள்ளுவர் ஆண்டு 2043

Read again:

1. G.O(Ms) No. 1427, Public Works Department, dated 24.08.1981
2. G.O(Ms) No. 1540, Public Works Department, dated 19.09.1981
3. G.O(Ms) No. 2314, Public Works Department, dated 24.11.1982

Read also:

1. From the Chief Engineer (General), Public Works Department Letter No. EIII(1)/111950/87-4, dated 11.04.1988.
2. From the Chief Engineer (General), Public Works Department Letter No. EIII(1)/111950/87-9, dated 22.12.1988.
3. From the Secretary, Tamil Nadu Public Service Commission Letter No. 6833/RND-A2/2008, dated 25.05.2012.

ORDER:

The following Notification will be published in the Tamil Nadu Government Gazette:-

**NOTIFICATION**

In exercise of the powers conferred by the proviso to Article 309 of the Constitution of India, the Governor of Tamil Nadu hereby makes the following amendments to the Special Rules for the Tamil Nadu Engineering Service (Section 10 in Volume II of the Tamil Nadu Services Manual, 1969).

2 (1) The amendment (1) hereby made shall be deemed to have come into force on the 19th September 1981.

(2) The amendments (2) hereby made shall be deemed to have come into force on the 24th November 1982.

## AMENDMENTS

In the said Special Rules, in Part II, under the heading "Branch I – Public Works":-

(1) for the expression "Special Grade Draughtsman" wherever it occurs, the expression "Special Grade Technical Officer" shall be substituted;

(2) for the expression "Senior Technical Officer", "Chief Technical Officer", Special Grade Technical Officer", wherever they occur, the expressions "Senior Draughting Officer", "Head Draughting Officer", "Special Grade Draughting Officer", shall, respectively, be substituted;

(By Order of the Governor)

M. Sai Kumar,
Secretary to Government.

## இரங்கல் செய்தி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் புதுக்கோட்டை கிளை உறுப்பினர் பொறியாளர் டி.வீரையன் இ.பொ அவர்களின் தாயார் டி. அங்கம்மாள் அவர்கள் 27.06.2016 அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை உறுப்பினர் பொறியாளர் G.ரமேஷ்குமார் உ.செ.பொ அவர்களின் தாயார் திருமதி. G. கடற்கரை தங்கம் அவர்கள் 7.6.2016 அன்று காரைக்குடியில் காலமானார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் மதுரை கிளை உறுப்பினர் பொறியாளர் R.சண்முகநாதன் உ.பொ அவர்களின் தந்தை திரு. M. இராமசாமி அவர்கள் 19.04.2016 அன்று விருதுநகரில் காலமானார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் பி. சண்முகம் உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் மேற்கு மண்டல செயலாளர் நினைவுப்பரிசு வழங்குதல்



Personnel and Administrative
Reforms(K)Department,
Secretariat,
Chennai-600 009

Letter No. 42868/K1/2015-1, dated 23.06.2016

From

Dr. P. Rama Mohana Rao, I.A.S.,
Chief Secretary to Government.

To

All Secretaries to Government, Chennai - 600 009
All Department of Secretariat, Chennai - 600 009
All Head of Department including District Collectors/ District Judges and Chief Judicial Magistrate,
The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai.

Sir,

Sub: Public Services - Meetings - Conducting Periodical meetings by Secretaries to Government, Departments of Secretariat and Heads of Department with representatives of Government employees - Instructions reiterated - Regarding.

Ref: 1. G.O.(Ms.)No. 109, Personnel and Administrative Reforms (K) Department, dated 25.06.2001.

2. Orders of High Court of Madras, dated 09.02.2016 in W.P.No.20993/2010.

In G.O. (Ms) No. 109, Personnel and Administrative Reforms (K) Department, dated 25.06.2001 necessary instructions/ guidelines were issued that the Secretaries to Government and Heads of the Department should conduct periodical meetings with the representatives of Goverment employees under their administrative control to redress their grievances and also to find solutions to their problems.

2. While disposing the W.P.No. 20993 of 2010 filed by Thiru P. Sounderarajan, Persident, Tamil Nadu Government Officials Association (C&D Group), Chennai, the Hon'ble High Court of Madras has observed as below:-

"3. In the counter affidavit filed by the respondent, in paragraph No. 10 the following has been stated:

"10. With reference to the averments made in para 10 of the affidavit, it is submitted that apart from the Joint Council/ District Council Meeting, instructions have been issued in G.O. (Ms.) No.109, Personnel and Administrative Reforms (K)

Department, dated 25.06.2001 for the conduct of Periodical Meetings with the representatives of Government Employee's to represent their grievances and to find solution to their problems. The petitioner's Association have the liberty to express their grievances with the Head of the Departments since, Joint Council/ District Council is not the only forum to sort out the problems of employees".

4. In view of the same, grievance of the petitioner has been addressed substantially".

3. Accordingly, in its order dated 09.02.2016 the Hon'ble High Court of Madras disposed the case with a direction to act as per instructions issued in G.O. (Ms.)No. 109 Personnel and Administrative Reforms (K) Department, dated 25.06.2001.

4.Hence, all the Secretaries to Government and the Heads of Department are requested to follow the guidelines issued in G.O.(M.S.) No. 109, Personnel and Administrative Reforms (K) Department, dated 25.06.2001 in conducting the meetings with the representatives of Government employees under their administrative control to redress their grievances and also to find solutions to their problems.

Yours faithfully,

for Cheif Secretary to Government,

## பொங்கும் நிதி

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர். S.கண்ணன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து அவரது குடும்பத்திற்கு குடும்ப நலநிதித் தொகையாக ரூ. 50,000/- க்கான வரைவோலை பொதுச்செயலாளர் அவர்களால் வழங்கப்பட்டது.



# இயங்கும் உலகம்

## தருமபுரி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை பொதுக்குழு கூட்டம் தருமபுரியில் 16.07.2016 சனிக்கிழமை காலை 10.45 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. கிளை உபதலைவர் ஊ.நகுலன் தலைமை ஏற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பொதுச்செயலாளர் த.முருகேசன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் சி.பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர். கிளை செயல்பாடுகள் பற்றி கிளை செயலர் பொறியாளர் S.கிருஷ்ணன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் 27 உறுப்பினர்கள் (98%) கலந்துகொண்டு சிறப்பித்தனர். பின்னர் கிளை வரவு, செலவு கணக்கினை பொருளாளர் பொறியாளர் T.வெங்கடேசன் அவர்கள் அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். பின்னர் மையச்சங்க செயல்பாடுகள் பற்றி மேற்கு மண்டல செயலர் அவர்கள் உரையாற்றினார். பின்னர் மையச்சங்க செயல்பாடுகள் பற்றி பொதுச்செயலர் D. முருகேசன் அவர்கள் நீண்டதொரு உரையாற்றினார். தருமபுரி கிளை உறுப்பினர் வருகை மற்றும் மையச்சங்கத்திற்கு செலுத்தவேண்டிய நிலுவை ஏதுமில்லை என பெருமைப்பட்டு தருமபுரி கிளைக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பின்னர் சமீபத்தில் பணி ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் A. செல்வராஜு உதவி செயற்பொறியாளர், V.முருகேசன் உதவிப்பொறியாளர் அவர்களுக்கு மையச்சங்க பொறுப்பாளர்கள் பொன்னாடை போற்றி கவுரவித்தனர் . சமீபத்தில் காலமான பொறியாளர் S. கண்ணன் உதவிசெயற்பொறியாளர் அவர்களின் குடும்பத்திற்கு பொங்கும் நிதி தொகை ரூ.50000/- வழங்கப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களுக்கு பொதுச்செயலாளர் உறுதிமொழி செய்து வைத்தார்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி.பெ. நடராஜன், |
| உபதலைவர் | - | பொறி.ஊ.நகுலன், |
| செயலாளர் | - | பொறி.S.R. சுப்பரமணியன், |
| இணை செயலாளர்-1 | - | பொறி. எம். கணேசன் |
| இணை செயலாளர்-2 | - | பொறி. வி. சுமதி |
| பொருளாளர் | - | பொறி.T. வெங்கடேசன், |

பின்னர் துணைத் தலைவர் பொறியாளர் ஊ. நகுலன் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது. பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானங்கள்**

1. அரசு ஆணை 1 உரிய விதி திருத்தம் பெற்று தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. இக்கிளை உறுப்பினர் சேதுமாதவன் அவர்களுக்கு பதவி உயர்வு பெற்றுதருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3.மாற்று சங்கத்தினர் அரசு ஆணை 1 மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி பொறியாளர்களுக்கு உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வை தடுப்பார்களேயானால் 2007 முதல் பணியமர்த்தப்பட்ட TNPSC உதவி பொறியாளர்களுக்கு துறை மாற்ற முன்மொழிவுக்கு இச்சங்கம் நிறுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

4. தருமபுரி இந்தியன் வங்கியில் உள்ள சேமிப்பு கணக்கு மற்றும் நிரந்தர வைப்பு கணக்கை புதிய பொருளாளர் மற்றும் செயலாளர் கூட்டாக இயக்க இக்கிளை தீர்மானிக்கிறது.

5. உதவி செயற்பொறியாளர் காலியிடப்பணிகள் வருடந் தோரும் ஒப்புதல் பெற (Estimate Vacancy) இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

6. உதவி பொறியாளர் (மின்) பதவி பணிவரன் முறை விரைவில் பெற்று தர கிளை மைய சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. மையச்சங்கத்தின் நிதிநிலையை உயர்த்த ஒரு கணிசமான தொகையினை மையச்சங்கத்திற்கு வழங்கிட இக்கிளை உறுப்பினர்களை கேட்டுக்கொள்கிறது.

## சேலம் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 16.07.2016 அன்று மாலை 4.00 மணிக்கு சேலம் பொதுப்பணித்துறை வளாகம் கிளைச்சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

கிளை பொதுக்குழு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கி கிளையின் தலைவர் பொறிஞர்.தி.உதயகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் பொறிஞர்.த. முருகேசன் மற்றும் மேற்கு மண்டல செயலாளர் பொறிஞர்.சி. பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர். கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் கிளையின் இணைச்செயலாளர் பொறிஞர். பி.பாலசுப்ரமணியம் வரவேற்று பேசினார். பின்னர் கிளைத்தலைவர் உரைக்குப்பின் கிளைச்செயலாளர் பொறிஞர் இரா. வேதநாராயணன் கிளைச்சங்க நடவடிக்கைகள் குறித்தும் உறுப்பினர்கள் வருகையின் இன்றியமையாமை குறித்தும் பேசினார். தொடர்ந்து மேற்குமண்டல செயலாளர் அவர்கள் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

கிளையின் பொருளாளர் பொறிஞர். எஸ். பாண்டியன் அவர்கள் வரவு செலவு கணக்குகள் குறித்து எடுத்துரைத்து உறுப்பினர்களின் அங்கீகாரம் பெற்றார். மாநில பொது செயலாளர் அவர்கள் தமது உரையில் இளம்பொறியாளர்கள் 22 நபர்களுக்கு உதவிப்பொறியாளராக பணிமாற்றம் ஆணை பெற்று தந்தது குறித்தும், இளம்பொறியாளர் / உதவிப்பொறியாளர் பணிவரன்முறை, பணி ஆய்வாளர் பதவியிலிருந்து தொழில்நுட்ப உதவியாளராக பணி உயர்வு, பணி ஆய்வாளர் பதவியிலிருந்து வரைதொழில் அலுவலராக பதவி உயர்வு குறித்தும், உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் குறித்தும் விரிவாக உரையாற்றினார். உறுப்பினர்கள் கேட்ட விளக்கங்களுக்கு மாநில பொதுச்செயலாளர் விரிவான பதிலுரை அளித்தார்.

பின்னர் மாநில பொதுச்செயலாளர் மூலம் உதவிசெயற்பொறியாளராக பணி ஓய்வு பெறவிருக்கும் பொறிஞர். பி. ஆசைதம்பி மற்றும் பொறிஞர். பி. சண்முகம் ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பட்டது. பொறியாளர்களை வாழ்த்தி மாநில பொது செயலாளர், மேற்கு மண்டல செயலாளர், கிளையின் தலைவர், கிளைசெயலாளர், கிளையின் பொருளாளர், உறுப்பினர்கள் பொறிஞர். எஸ். ஆறுமுகம், பொறிஞர். பி. சுமதி ஆகியோரும் மற்றும் மூத்த பொறியாளர்கள் பொறிஞர். ம. பலராமன், பொறிஞர். கிருஷ்ணமூர்த்தி மற்றும் பொறிஞர். சி.ராமசாமி ஆகியோர் ஓய்வுபெறும் பொறியாளர்களை பாராட்டி பேசினர்.

தொடர்ந்து சேலம் கிளையின் 2016 - 17ஆம் ஆண்டுக்கான கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் மாநில பொதுச்செயலளார் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கீழ்கண்டவர்கள் கிளை பொறுப்பாளர்களாக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைவர் | - | பொறி. எஸ். ஆறுமுகம். |
| 2. | உபதலைவர் | - | பொறி. ஆ. இராசேந்திரன் |
| 3. | செயலாளர் | - | பொறி. இரா. வேதநாராயணன் |
| 4. | இணைச்செயலாளர் -1 | - | பொறி. வெங்கடாசலமணி |
| 5. | இணைச்செயலாளர்- 2 | - | பொறி. பி. பாலசுப்ரமணியம் |
| 6. | பொருளாளர் | - | பொறி. எஸ். பாண்டியன் |

கூட்டத்தின் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிதே முடிவுற்றது.

1. தேர்வாணையம் மூலம் இளம்பொறியாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறது.
2. உதவிப்பொறியாளர்களுக்கு தவறாக பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணையை திருத்தம் செய்து உதவிப்பொறியாளராக பணியேற்ற நாளிலிருந்து பணிவரன்முறை ஆணை பெற்றுத்தர கேட்டுக்கொள்கிறது.
3. உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியல் விரைவில் பெற்றுத்தர கேட்டுக்கொள்கிறது.
4. இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் பணி அமர்த்தப்பட்ட பொறியாளர்களுக்கு மிக நீண்ட காலமாக நிலுவையில் உள்ள பணி இடைக்காலம் பிழை பொறுத்தல் கோப்புமீது நடவடிக்கை எடுத்து ஆணை பெற்று தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.
5. பணி ஆய்வாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் வரைவாளர் பதவிப்பெற உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.
6. 2016-2017 ஆம் ஆண்டில் பொறி. ஏ. முருகேசன், உதவிப்பொறியாளர் அவர்கள் இல்ல காப்பாளராக தொடர்ந்து செயல்பட தீர்மானிக்கப்படுகிறது.

நிறைவாக கிளையின் இணைச்செயலாளர் பொறிஞர். வெங்கடாசலமணி அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிவடைந்தது.

## மதுரை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொதுப்பணித்துறை, மதுரை கிளையின் 2016-2017 ஆண்டிற்கான தேர்தல் பொதுக்குழுக் கூட்டம், 16.07.2016 சனிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பொறி S. பிரபாகரன் தலைமையேற்று நடத்தினார். கிளைத்துணைத்தலைவர் பொறி J. சீனிவாசன் வரவேற்றார். பின்னர் கிளை உறுப்பினர் பொறி G. ரமேஷ்குமார், உதவி செயற் பொறியாளர் அவர்களின் தாயார் திருமதி G. கடற்கரை தங்கம் அவர்களின் மறைவுக்கும், கிளை இணைச்செயலாளர் பொறி R. சண்முகநாதன், உதவி பொறியாளர் அவர்களின் தந்தை M. இராமசாமி அவர்களின் மறைவிற்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் கிளைச்செயலாளர் பொறி V.இரவிச்சந்திரன் கிளைச்சங்க செயல்பாடுகள் பற்றி பேசினார். கிளை வரவு செலவு அறிக்கையை கிளை பொருளாளர் N. சந்திரன் அவைக்கு வழங்கி கிளை வரவு செலவு பற்றி உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார். பின்னர் சிறப்பு அழைப்பாளர்களான பொறி. CP மோகன்குமார், மைய மண்டலச்செயலாளர் அவர்களும் பொறி M. பஞ்சவர்ணம், மாநிலத் தலைவர் அவர்களும் மையச்சங்க நடவடிக்கைகள் குறித்து நல்உரை ஆற்றினார்கள். இக்கிளையின் மூத்த உறுப்பினர்கள் பொறி D. சாமுவேல்ராஜ் மற்றும் பொறி k. கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு உறுப்பினர்கள் உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். கிளை உறுப்பினர்கள் பொறி S. லீலாவதி, பொறிG. ரமேஷ்குமார்,பொறி B.இராமசுப்பிரமணியன், பொறி K. போஸ் ஆகியோர் தங்களது கருத்துக்களை பதிவு செய்தார்கள். பின்னர் 2016-2017ம் ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. தலைவர் - பொறி. S. லீலாவதி
2. உப்தலைவர் - பொறி. S. கதிரவன்
3. செயலாளர் - பொறி. V. இரவிச்சந்திரன்
4. இணைச்செயலாளர்1 - பொறி. R. சண்முகநாதன்
5. இணைச்செயலாளர்2 - பொறி. K. போஸ்
6. பொருளாளர் - பொறி. S. சீனிவாசன்

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளை பொறுப்பாளர்கள் மாநிலத் தலைவர் பொறி M.பஞ்சவர்ணம் அவர்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பின்னர் துணைத்தலைவர் பொறி S. கதிரவன் அவர்கள் நன்றி நவில இக்கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1. பணி ஆய்வாளரில் இருந்து இளநிலை வரைதொழில் அலுவலராக விருப்பக்கடிதம் கொடுத்துள்ளவர்களுக்கு விரைந்து அப்பதவியை பெற்றுத்தர மையச்சங்கத்தை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

2. துறையில் காலியாக உள்ள இளநிலைப் பொறியாளர் பணியிடங்களை தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் நியமனம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க கேட்டுகொள்ளப்படுகிறது.
3. பகுதிநேரப் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்தேதியிட்டு உதவிப்பொறியாளராக பணிவரன்முறை செய்யாத துறைத் தலைமைக்கு இக்கூட்டம் கண்டனம் தெரிவிக்கிறது.
4. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வில் நமது உறுப்பினர்களின் நலன்கள் பாதிக்கப்படாதவாறு பட்டியல் தயாரிக்க தக்க நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
5. நடுநிலையான துறை நிர்வாகத்திற்கு பொபது துறைத்தலைமைக்கு IAS அதிகாரியை நியமித்திட பெயரளவில் இல்லாமல் அதை செயலாக்கம் பெற்றிட தொடர் நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்குழு கேட்டுகொள்கிறது.

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண்:348 பொதுப்பணி(எப்1)த்துறை நாள் 29.07.2016)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | B. இராஜேஸ்வரி | தலைமைப் பொறியாளர் |
| 2. | S. செல்வராஜ் | கண்காணிப்பு பொறியாளர் |
| 3. | P. பெரியசாமி | செயற்பொறியாளர் |
| 4. | V. அன்பழகன் | துணை கண்காணிப்பு பொறியாளர் |
| 5. | R. பெரியசுவாமி பிரகலாதன் | செயற்பொறியாளர் |
| 6. | P. ஆசைத்தம்பி | உதவிசெயற்பொறியாளர் |
| 7. | J. பிரபாகரன் | தலைமை வரைதொழல் அலுவலர் |
| 8. | B. முத்து | தலைமை வரைதொழல் அலுவலர் |
| 9. | S. ராஜரத்தினம் | தலைமை வரைதொழல் அலுவலர் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்கே. பிரபாகர்**
அரசு முதன்மைச் செயலாளர்

## கல்விபரிசுத்திட்டம்

பொறியாளர் எஸ். கணபதி கல்வி பரிசு திட்டத்திற்கான பரிசுத்தொகையை பொறியாளர் சி.ப.சண்முகம் முன்னாள் மாநில தலைவர் அவர்கள் வழங்குகிறார்கள்.

பொறியாளர் எஸ். முருகானந்தம் கல்விப் பரிசு திட்டத்திற்கான முதல் பரிசை பொறியாளர். N. வெங்கட்ராமன் முன்னாள் பொதுச்செயலாளர் அவர்களும் இரண்டாம் பரிசை பொறியாளர். K. கமால்தீன் வெளியீட்டுச்செயலாளர் அவர்களும் மூன்றாவது பரிசை பொறியாளர்.V. ரவிச்சந்திரன் தலைவர் வேலூர் கிளை அவர்களும் வழங்குகிறார்கள்.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை துணைத் தலைவர் பொறியாளர் எ.இராஜேந்திரன் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப் பெயர் மாற்றத்திற்காக ரூ 5000/- (ஐந்தாயிரம் ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் பி.ஆனைத்தம்பி உதவிச் செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் ஓய்வு பெற்றமைக்கு ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை பொருளாளர் பொறியாளர் எஸ்.பாண்டியன் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப் பெயர் மாற்றத்திற்காக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் வேலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் வி.இராஜேந்திரன் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப்பெயர் மாற்றத்திற்காக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.சுப்பிரமணியம் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப்பெயர் மாற்றத்திற்காக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளை உறுப்பினர் பொறியாளர் வி..பிரபாகரன் உதவிப்பொறியாளர் அவர்கள் பதவிப் பெயர் மாற்றத்திற்காக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தர்மபுரி கிளை தலைவர் பொறியாளர் பி.நடராஜன் உதவிச் செயற் பொறியாளர் அவர்கள் தனது மகள் திருமணத்திற்காக ரூ 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தர்மபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் ஜி.விஜயன் உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் இல்ல புனரமைப்பு நிதியாக ரூ1000/ (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் பி.சண்முகம் இளம்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு ரூ 1000/- (ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் ஆர்.கார்த்திகேயன் உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகையில் ரூ 1000/- (ஆயிரம் மட்டும்) இல்ல புனரமைப்பு நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் செ.செல்லத்துரை உதவி செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகையில் ரூ 700/- (ஏழு நூறு மட்டும்) மைய சங்கத்திற்கும் ரூ 700/- (ஏழு நூறு மட்டும்) கடலூர் கிளைக்கும் நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளை உறுப்பினர் பொறியாளர் கே.கலியமூர்த்தி உதவிச் செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் எஸ்.சண்முகவடிவு உதவிச் செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 1000/- (ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளை உறுப்பினர் பொறியாளர் பி.நாகராஜன் உதவிச் செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் சங்க வளர்ச்சி நிதியாக ரூ 1000/- (ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் ஈரோடு கிளைமுன்னாள் தலைவர் பொறியாளர் பி.ராமசாமி உதவிச் செயற் பொறியாளர் (ஓய்வு) அவர்கள் பணி ஓய்வு பெற்றமைக்கு ரூ 2000/- (இரண்டு ஆயிரம் மட்டும்) நன்கொடையாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## ஜூன் 2016 மாத பொறியாளர் இதழில் இருந்து

To
The Engineer-in Chief, WRO
And Chief Engineer (General),PWD,
Chepauk, Chennai-5

Sir,

Sub: TNPWD - Establishment - Division Bench of Madras High court in W.P. No. 34276,14865 and 24783 of 2007- treating the JDOs, DOs, Overseers who acquired B.E and re-designated as Assistant Engineers in Sub- ordinate Service similar to the Assistant Engineers re-designated from Juniors Engineers on acquiring B.E Degree- requested - regarding.

Ref: 1. The orders of the Hon'ble High Court of Madras dated 15.10.2014 in writ Petition Nos. 34276,14865 and 24783 of 2007

2. The Orders of the Hon'ble Supreme Court of India dated 27.11.2013 in B. Thirumal Vs Ananda Sivakumar and others in C.A. Nos. 10660 -62 of 2013

We submit that the Hon'ble High Court of Madras in the reference (1) cited ordered that the Junior Engineers, coming under Tamilnadu Engineering Subordinate Service, re-designated as Assistant Engineers from the date of their acquiring B.E degree shall continue to be under the category of Junior Engineer and such re-designation shall not amount to appointment as Assistant Engineers and should be considered to continue under Tamilnadu Engineering Subordinate Service

(TNESS) only and accordingly, their promotion, (i.e., recruitment by transfer, as Assistant Executive Engineer) shall be made within the 25% quota available for Junior Engineer of TNESS and not within the 75% quota earmarked for Assistant Engineers of Tamilnadu Engineering Service (TNES).

In this situation we learnt that AE re-designated from JDOs, DOs, Overseers who are all in Tamilnadu Engineering Subordinate Service (TNESS) are claiming for promotion to the post of AEE in the 75% quota of directly recruited AE in Tamilnadu Engineering Service (TNES), contrary to analogy of judgment of Hon'ble division bench of Madras High Court.

We submit here with the following points to justify our claims in treating the JDOs, DOs, Overseers who acquired B.E and re-designated as Assistant Engineers in Sub-ordinate Service.

1) As per the observations of the Hon'ble Supreme Court of India dated 27.11.2013 in B. Thirumal Vs Ananda Sivakumar and others in C.A.Nos. 10660 -62 of 2013 and the orders of the Hon'ble High Court of Madras dated 15.10.2014 in Writ Petition Nos. 34276,14865 and 24783 of 2007,even though Junior Engineers who acquired B.E degree were, consequent to acquisition of B.E Degree, re-designated as Assistant Engineer, but continue to be treated in Tamilnadu Engineering Subordinate Service in which the Junior Engineer is a member. The said judgments have been passed after considering the relevant provisions of Tamilnadu Engineering service. Therefore, the result is that a Junior Engineer, the highest category, who acquired B.E Degree after entering service as Junior Engineer, and which is made as feeder category to Assistant Engineer by recruitment by transfer has been denied the status of Assistant Engineer in Tamil Nadu Engineer Service even after re-designation as Assistant Engineer.

2) Now, considering the case of the Overseers, DOs, JDOs etc., who are feeder categories to Junior Engineer are being appointed as Assistant Engineers simply on the acquisition of B.E just like the Juniors Engineers appointed as Assistant Engineers by re-designation. Now the Hon'ble Supreme Court and High Court have held that the re-designated Assistant Engineers from Junior Engineers are to be treated as Junior Engineers only and not as Assistant Engineers in Tamil Nadu Engineering Service. Therefore, on the same anology, the DOs, JDOs and Overseers who were appointed as Assistant Engineers simply on the reason of acquiring B.E cannot be treated as Assistant Engineers in Tamil Nadu Engineering Service but could be treated as DOs/ JDOs/ Overseers in Tamil Nadu Engineering Subordinate Service as the case may be. Otherwise, it will lead to a position that a Junior Engineer with B.E Degree who is higher category to DO/ JDO/ Overseer with B.E Degree and appointed as Assistant Engineer shall remain in Tamil Nadu Engineering Subordinate Service in which the Junior Engineer is a member, whereas the DOs/JDOs/ Overseers with B.E Degree who are lower and feeder category to Junior Engineer and appointed as Assistant Engineer will be treated as Assistant Engineers in Tamil Nadu Engineering Service, Which is highly discriminatory.

3. The serious impact of promoting the Assistant Engineers re- designated from

DO's/JDO's/ Overseer considering that Quota reserved for Assistant Engineers in Tamil Nadu Engineer service.

i. The Junior Engineer was appointed much earlier to the DO/JDO/Overseer, had rendered more service, has higher status, and is promotive category of DO/JDO/Overseer, but is directed to continue in Tamil Nadu Engineering Subordinate Service, after acquiring BE degree & re-designated as Assistant Engineer in the light of the judgments and hence it is impermissible to treat the Assistant Engineer appointed from still lower category, viz., DO/ JDO/Overseer on acquiring B.E as Assistant Engineer in Tamil Nadu Engineering Service, instead they should be continued to be in Tamil Nadu Engineering Subordinate Service, be considered for Promotion to the post of Assistant Executive Engineer under 25% Quota reserved for Tamil Nadu Engineering Subordinate Service

ii. Therefore the Assistant Engineers appointed from DOs/JDOs/Overseers on acquiring B.E degree shall also be in Tamil Nadu Engineering Subordinate Service as the case may be as being done for the Assistant Engineers appointed from Junior Engineers by re-designation as ordered in the judgments.

4) Further, the Special Rules to Tamilnadu Engineering Service enables appointment of DOs/JDO's/ Overseer to be appointed as Assisant Engineer by recruitment by transfer only if acquired B.E degree after appointed as Junior Engineer and hence the rules do not permit appointment of a DO/JDO/Overseer as Assistant Engineer on acquiring B.E degree. The DOs/JDOS/Overseers are being appointed as Assistant Engineers only based on the Executive orders issued in G.O Ms. No.1 Public Works Department dt 02.01.1990, pending amendment to service rules. But, now the Government in G.O. No.22 P&AR Dept, dated 24.02.2014 has amended rule 4(a) of General Rules of the Tamilnadu State and Subordinate Service Rules giving statutory effect to the orders issued in G.O.368 dt 18.10.93 the effect that no appointment shall be made based on executive orders pending issue of amendments. This amendment has been given retrospective effect from 1993. Therefore, all the appointment of Assistant Engineer made from DOs/JDOs/Overseers on acquiring B.E degree based on G.O Ms. No.1, dated 02.01.1990 after 18.10.93 stands nullified. Therefore, the Assistant Engineers appointed from DOs/JDO/Overseers on acquiring B.E Degree shall not be considered as Assistant Engineers in Tamil Nadu Engineer Service, but only in Tamil Nadu Engineering Subordinate Service as case may be and should be considered for promotion to the Post of Assistant Executive Engineer in the 25% Quota reserved for Tamil Nadu Engineering Subordinate Service and not in the 75% quota reserved for directly recruited Assistant Engineers in Tamil Nadu Engineering Service as per the Hon' Court Judgments.

Hence we humbly request to treat the JDOs, Dos, Overseers who acquired B.E and re-designated as Assistant Engineers only in Sub- ordinate Service similar to the Assistant Engineers re-designated from Juniors Engineers on acquiring B.E Degree and render justice as per the Hon'ble High court judgment in W.P No. 34276, 14865 and 24783 of 2007.

**Thank you**



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்!

திருமுருகன் திருவருள் துணைக்கொண்டு நிகழும் துர்முகி வருடம் ஆவணி மாதம் 6- ஆம் தேதி **(22.08.2016)** திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு மேல் 7.30 மணிக்குள்

காஞ்சிபுரம்
கச்சி தெற்கு மாட வீதி
எங்கள் இளைய மகன் திருவளர்செல்வன்

**G. கிரிபிரசாத்** B.E.,
என்கிற வரனுக்கு
**திருவள்ளூர்**
திரு.**P. திருநாவுக்கரசு முதலியார்** -
திருமதி.**T. கோட்டீஸ்வரி** தம்பதியரின் பௌத்திரியும்
திரு.**T.முகுந்தன்** - திருமதி. **M. அமுதா** தம்பதியரின்
மூத்த மகளுமான திருவளர்செல்வி

**M. கிருத்திகா,** M.Sc.,
என்கிற கன்னிகையை

இல்வாழ்க்கை துணைவியாக்கப் பெரியோர்களால் நிச்சயித்தவண்ணம் மேல் திருப்பதி, ரிங்ரோடு ஸ்ரீ சிருங்கேரி சங்கர மடம் **ஸ்ரீ சாரதா கல்யாண மண்டபத்தில்** நடைபெறும் திருமணத்திற்கு தாங்கள் தங்கள் சுற்றமும், நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள,
**N.S. கௌரி சங்கர், DCE., M.Tech.,**
உதவி செயற்பொறியாளர், நீஆது, இராணிப்பேட்டை
முன்னாள் மாநில தலைவர் த.நா.பொறியியல் சங்கம்
**S. ஜெயந்தி, B.Sc., M.Ed.,**
தலைமை ஆசிரியை, நகராட்சி துவக்கப்பள்ளி,
காஞ்சிபுரம். Cell: **94433 50515**

வரவேற்பு
28.08.2016 ஞாயிற்றுக்கிழமை
பகல் 11.00 to 12.00 மணி
தொண்டை மண்டல ஆதிசைவ வேளாளர் சமுதாய கூடம்
காமராஜர் வீதி, காஞ்சிபுரம்.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீ துர்முகி வருடம் ஆவணி மாதம் 5-ம் தேதி (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணபட்சம் திரிதியை திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.45 மணி முதல் 8.45 மணிக்குள் கன்னியா லக்கினத்தில்

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி

Er.P.குலசேகரன்-திருமதி T.முருகானந்த தமிழரசி தம்பதியின் புதல்வன்

திருநிறைசெல்வன்

**K. பிரதீப் B.E.,MBA., PG Diploma in Game Development,**

(Chief Technical Officer (CTO),Skytou Studios Pvt. Ltd., Chennai)

சென்னை. திரு.N.நாகேஸ்வரன் - திருமதி. N. நலங்கனி தம்பதியின் புதல்வி

திருநிறைசெல்வி

**N.சங்கமித்ரா M.com.,MBA.,**

(Senior Process Associate, Royal Bank of Scotland, Chennai)

இவர்கள் திருமணம் பெரியோர்களால் உறுதி செய்த வண்ணம், மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் உள்ள "உசிலம்பட்டி சத்திரியகுல இந்து நட்டாத்தி நாடார்கள் உறவின் முறை (பதிவு எண்:442/91) க்குப் பாத்தியமான **சரஸ்வதி மஹாலில்** நடைபெறும் திருமணத்திற்கு உறவும், நட்பும் சூழ வந்திருந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புடன் வரவேற்கும்
K. அருண் B.E.,
Lead Engineer, HCL, Chennai
K. விக்னேஷ் B.E.,
Systems Engineer, TCS, Chennai

தங்கள் அன்புள்ள,
**Er.P. குலசேகரன் D.C.E.,**
உதவி செயற் பொறியாளர், பொ.ப.து, (ஓய்வு)
முன்னாள் மாநில துணைத்தலைவர், த.நா. பொறியியல் சங்கம்
திருமதி.**T.முருகானந்த தமிழரசி B.Sc.,B.Ed.,**
ஆசிரியை, நாடார் சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி,உசிலம்பட்டி.
செல்:**97895 76886, 94430 22054**

**திருமண வரவேற்பு**
நாள்: **26.08.2016,** வெள்ளிக்கிழமை
மாலை 6.00 மணிக்குமேல் சென்னை - 40,
அண்ணாநகர், P1/1, 3வது அவென்யூ,
K.4 காவல் நிலையம் அருகில்
**கைலாஷ்ஸ்ரீ மஹாலில்**
நடைபெறும்.

**நிச்சயதார்த்தம்**
**20.08.2016** சனிக்கிழமை மாலை 6.45 மணிக்கு மேல் 7.25 மணிக்குள் மேற்படி திருமணமண்டபத்தில் நடைபெறும்.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீ துர்முகி வருடம் ஆவணி மாதம் 19-ஆம் நாள் (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை, சுக்லபட்சம், த்ருதியை திதி, ஹஸ்த நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 7.00 மணிக்குமேல் 8.30 மணிக்குள் கன்னியா லக்னத்தில்

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், கொத்தப்பாளையம்
கிராமம், திரு.கே.செல்லமுத்து - திருமதி. இரா. சாந்திமணி
தம்பதிகளின் குமாரன் திருநிறைச்செல்வன்

**S. நந்தகுமார்** B.E.,

கரூர் - தாந்தோன்றிமலை திரு. அ. துரைசாமி - திருமதி. கி. மல்லிகா
அவர்களின் குமாரத்தி திருநிறைச்செல்வி

**D.நிஷா** M.A.,B.Ed.,

ஆகியோரது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி திருமணம் **தாந்தோன்றிமலை KCM மஹாலில்** நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள,

Er.K. **செல்லமுத்து** D.C.E.,
இளம்பொறியாளர் - பொதுப்பணித்துறை
திட்ட மேலாண்மை அலகு, திருச்சி.

திருமதி. R. சாந்திமணி
**திரு. P. முருகேசன் VNC Filements, Karur.**
**திருமதி. M.** மல்லிகா பசுபதி பாளையம், கரூர்.
**செல்வி. M. தேவகி B.A.,B.Ed.,**
M-36, TNHB, காந்திகிராமம், கரூர்.
கைபேசி : **99655 48958**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

# மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற ஆகஸ்டு திங்கள் 13 மற்றும் 14 தேதிகளில் நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் வடக்கு மண்டலம் சார்பில் வேலூரில் நடைபெற உள்ளது.

இடம் : **காயத்ரி மஹால்**
**எண். 82, குருதோப்பு, சத்துவாச்சாரி**
**அலகாபாத் பேங்க் அருகில்**
**வேலூர் - 9.**

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பொறி. எஸ். கண்ணன்**
**செயலாளர் அமைப்பு & சட்டம்**

2016-2017 ஆம் ஆண்டிற்கான தருமபுரி கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் ஏ.செல்வராஜு உ.செ.பொ அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் பொன்னாடை அணிவிக்கிறார்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் வி. முருகேசன் அவர்கள் பணி ஓய்வை முன்னிட்டு கிளை பொதுக்குழுக் கூட்டத்தில் மேற்கு மண்டல செயலாளர் பொன்னாடை அணிவிக்கிறார்.



Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2015-17 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**August 2016**

## 2016-2017 ஆம் ஆண்டிற்கான மதுரை கிளை புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்தல்



தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

**Posted on**
**05-08-2016**

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75318